காலைக்கதிர்
Kalaikkathir
விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை 24.08.2025 கதிர் 287

## இது ரகசியம் அல்ல!

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கேவின் சார்பாக எதிர்க்கட்சித்தலைவர்களின் பரந்த கூட்டணியை ☞2

# கொழும்பு தேசிய வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ரணில்

வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலைஅவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைக்குச்சென்றதுமே அவரது உடல்நிலையைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்கு உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதியில்குளுக்கோஸின்அளவு (அவர் ஒரு நீரிழிவு நோயாளி) ஆகியன அதிகரித்திருக்கின்றன என்று தெரிவித்து அவரை சிறைச்சாலைவைத்தியசலையில் சேர்த்தனர்.

வெள்ளிக்கிழமை இரவு சிறை மருத்துவமைனயில்சேர்க்கப்பட்ட அவரின்உடல்நிலையைக்காரணம் காட்டி நேற்று சனிக்கிழமை அதிகாலையில் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்என்றுஅதிகாரிகள் தெரிவித்தனர்.

மருத்துவ மதிப்பீடுகள் அவரது உடல்நிலைக்கு சிறை மருத்துவமனையில் வழங்கப்படுவதைவிடச்சிறப்புச்சிகிச்சைதேவை என்றுசுட்டிக்காட்டியதைஅடுத்து இந்தமுடிவுஎடுக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய ☞2

## சுமந்திரன் கருத்து

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ரணில் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். அரச நிதியை முறையற்ற வகையில் பயன் படுத்திமை தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 26 வரை அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் தனது 'எக்ஸ்' தளத்தில் அது பற்றிக் கருத்துத் ☞2

## தொடருந்து சேவைகள் பல இன்றைய தினம் நிறுத்தம்

கரையோரமார்க்கத்தின்அத்தியாவசியபராமரிப்பு பணிகள் காரணமாக இன்று பல தொடருந்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தொடந்துவ மற்றும் பூஸா இடையேயான கடலோர கரையோர மார்க்கத்தின் பல தொடருந்து சேவைகள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக தொடருந்துவே பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரியா அறிவித்துள்ளார்.

அதன்படி, இன்றையதினம், காலி ☞6

## சகல கட்சிகளுடனும் இணைந்து ஜனநாயகத்தை காக்க போராட்டம்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

நாட்டில்இடம்பெற்றுக்கொண்டிருக்கும்ஜனநாயக மீறல்களையும், அரசியல் பழிவாங்கல்களையும் இனியும் பார்த்துக் கொண்டிருக்க போவதில்லை. சகல கட்சிகளுடனும் இணைந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தை ஆரம்பிப்போம் என ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவித்தனர். அத்தோடு முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதுள்ள அச்சத்திலேயே அவர் திட்டமிட்டு அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினர்.

கொழும்பு - பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள்அரசுத்தலைவரின்அரசியல்அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தனர். ☞6

# அரசுத் தலைவருக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு அப்பால் பொது நிதியை பயன்படுத்தவில்லை

### ரணில் விவகாரத்தில் ஐ.தே.க. தவிசாளர் விளக்கம்

இலங்கையின் அரசமைப் பிற்கமைய எந்தவொரு அரசுத் தலைவருக்கும் தனது பதவி காலத்தில் 'தனிப்பட்ட' என்ற சொற் பதத்தை பிரயோகிக்க முடியாது. அதேவேளைஅரசுத்தலைவருக்குரிய நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பால் எந்த சந்தர்ப்பத்திலும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் பொது நிதி பயன்படுத்தப்படவில்லை எனஐக்கியதேசியகட்சியின்தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

மேலும்நீதிமன்றத்தில்மின்தடை ஏற்படுவது சாதாரண விடயமல்ல என்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்த விசாரணைகளின் போது மின்தடை ஏற்பட்டதா? அல்லது ஏற்படுத்தப்பட்டதா என்றும் கேள்வியெழுப்பினார்.

கொழும்பு-பிளவர்வீதியில்அமைந்துள்ளரணில் விக்கிரமசிங்கவின்அரசியல்அலுவலகத்தில்நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், ☞2

## ரணில் விக்கிரமசிங்கவின் கைது பழிவாங்கலே தவிர வேறில்லை

### மகிந்த ராஜபக்ச கொதிப்பு

நாட்டு மக்கள் ஆளும்தரப்பின் நடவடிக்கைகளை சரியாகப் புரிந்துகொண்டுள்ளனர். இதுபோன்ற நடவடிக்கைகள் பழிவாங்கும் செயல்களைத் தவிர வேறொன்றும் இல்லை. அரசியலில் கைது என்பது ஒரு மரபாகும். ரணில் விக்கிரமசிங்க அதை எதிர்கொள்வார் என ☞2

## எப்போதும் நாட்டுக்காகவே செயற்பட்டேன் தனிப்பட்ட நலனுக்காக பணியாற்றவில்லை

### சிறைக்குச் செல்ல முன்னர் ரணில் தெரிவிப்பு

நான் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காகவே செயற்பட்டேன். மாறாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனது தனிப்பட்ட இலாபத்துக்காக செயற்படவில்லை என முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.தான்வெள்ளிக்கிழமைகைதுசெய்யப்படுவதற்கு முன்னர் நாட்டுக்கு மக்களுக்கு இதனைக் கூற விரும்புகிறார் என்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு-பிளவர்வீதியில்அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் ☞2

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை காலை முதல் பணி நிறுத்தம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. வைத்தியர்களின்இடமாற்றம்தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ளகோரிக்கைகளைஉள்ளடக்காமல் இடமாற்ற பட்டியல் வெளியிடப்பட்டுள்ளமைக்கு ☞2

## ரணிலுக்கு ஒத்துழைத்த குற்றத்திற்கு அவரது செயலாளர் மீதும் விசாரணை

கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்திற்கான நிதியை அங்கீகரித்தமை குறித்து முன்னாள் அரசுத் தலைவர் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தொடர்பிலும் தற்போது விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸ்சட்டப்பிரிவின்பொறுப்பாளரானபிரதிபொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்தார். ☞2

## குற்றச் சொத்துக்கள் பற்றி விசாரிக்கத் தனிப் பிரிவு

### மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

குற்றச்செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் குறித்து விசாரணைகளைமேற்கொள்வதற்கு புதிய விசாரணைப் பிரிவொன்றை தொடங்கவுள்ளதாக மேல் மாகாண வடக்கிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷாந்த சொய்சா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்ட, குற்றச் செயல்கள் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துச் சட்டத்தின்படி இந்த விசாரணை பிரிவு தொடங்கப் படவுள்ளதாக அவர் கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விரைவில் தொடங்கப்பட உள்ள புதிய விசாரணைப் பிரிவு, பொலிஸ்மா அதிபரின் ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உருவாக்குவது பற்றிக் கொழும்பில் மீண்டும் பேச்சடிபடுகின்றது.

ரணில் விக்ரமசிங்கேவின் விடுதலை உட்பட எதிர்க்கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை இலக்கு வைத்து இந்தப் பரந்த கூட்டணி உருவாக்கப்படும் என்று எதிர்க்கட்சியின் மூத்த அரசியல் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த பரந்த கூட்டணியின் முதல் படியாக, முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் இன்று காலை 10 மணிக்கு ஊடகங்களுக்கு உரையாற்ற உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள்ஜனாதிபதிகள்மஹிந்தராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசியல்தலைவர்களும், சமகிஜனபலவேகய மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டணியில் இணைவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளும் எதிர்க் கட்சி வரிசையில்இருந்தாலும்இந்தக்கூட்டணியில் அவை இணைவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று உறுதியாகத் தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்குச் செய்து வைத்திரும் வேலை அப்படி. ஏதாவது ஒரு தமிழ்க் கட்சி இப்போது ரணிலுக்கு ஆதரவாகக் கொடி தூக்கினால் அதுவே அடுத்த தேர்தலில் முதன்மைத் துரோகியாக நிலைநிறுத்தப்படும் என்பது சர்வ நிச்சயம். அதனால் எந்தத் தமிழ்க் கட்சிகளும் இந்தக் கூட்டணிக்குள் நுழையாது. ஆனால் புதிய எதிர்க் கட்சிக் கூட்டணி அமைந்து, அது சில முன்னகர்வுகளை எடுக்கும்போது அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தமிழ்க் கட்சிகள் அது தொடர்பில் முடிவு எடுக்கும்.

ரணிலின் விடுதலையை முன்னிட்டு எதிர்க் கட்சிகளினன் இந்த ஒருங்கிணைவு இருந்தாலும் அது எதிர்காலத்தில் ஒரு அரசியல் கூட்டணியாக பரிணமிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே என்ற கருத்தும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருக்கின்றன. ஒவ்வொருகட்சிகளுக்குள்ளும் தலைவர்களுக்கும் ரணில் தனது குள்ளநரித் தனத்தால் செய்து வைத்திருக்கும் வேலைகள் அப்படி.

இதற்கிடையில் நேற்று ரணிலை வைத்தியசாலையில் சென்று சந்தித்தார் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது ரணிலுக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவிக்கப்படுவது பற்றிக் கூறுகையில் அவருக்கு வழக்கமாக இருக்கும் நோய்கள்தான் இருக்கின்றன, அதொன்றும் பெரியவிடயமில்லை, ரணில் மீண்டு வந்துவிடுவார் என்றும் தெரிவித்தார். ஆனால், ரணிலின் உடல்நிலை மோசம் என்று கூறி அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறைகளில் அடைக்கப்படும் அரசியல்வாதிகள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்வது ஒன்றும் புதிதில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையிலேயே படுத்துக் கிடப்பார்கள். சிறை அறைகளைவிட வைத்தியசாலை சற்று விட்டுவீதியான, சுகாதாரமான, தூய்மையான பகுதி என்பதால் வீட்டிலிருந்து அல்லது வெளியே விடுதிகளிலிருந்து உணவைப் பெற்றபடி அங்கு தங்கியருந்து ஓய்வெடுப்பதையே அரசியல்வாதிகள் விரும்புவர். அதனால் அவர்களுக்குநோய்ஏற்படுவதுவழமை. ரணில் விடயத்தில் சிறை வைத்தியசாலையையும் தாண்டி, தேசிய மருத்துவமனை அவசரச் சிகிச்சைப் பிரிவு, பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு என்று சிகிச்சை பலமாக வழங்கப்படுகின்றது.

நிலமை அப்படிக் காட்டப்பட்டுக் கொண்டிருக்க, மகிந்தவோ ரணிலுக்கு இருப்பது வழக்கமாக அவருக்கு இருக்கும் நோய்கத்தான் என்று சாதாரணமாகச் சொலலிவிட்டுப் போய்விட்டார். எந்த ஆட்சி வந்தாலும் இந்த நாடகம் மட்டும் மாறாது போலவே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## கொழும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு (ICU) மாற்றப்பட்டுள்ளார்.

அவரது உடல்நிலை காரணமாக அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து அதி தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்ற மருத்துவர்கள் பரிந்துரைத்தனர் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் துணை இயக்குநர் மருத்துவர் ருக்ஷன் பெல்லனா தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கேவிற்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பு தெரிவித்து இவ்வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை கூடவுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு கூட்டத்திலேயே வேலை நிறுத்த போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து தீர்மானிக்கப்படும் என நிறைவேற்றுக்குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

சுகாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குஅமைச்சிடமிருந்துதகுந்த பதில் கிடைக்காவிட்டால் கடந்த 11ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும் தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்ததாகவும், எனவே வேலை நிறுத்தத்தைதற்காலிகமாகஒத்திவைப்பதாகவும் பின்னர் அறிவிக்கப்பட்;டது.

எவ்வாறிருப்பினும் நேற்றைய தினம் புதிய இடமாற்ற பட்டியல் வெளியிடப் பட்டுள்ள போதிலும், அதில் தம்மால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் முழுமையாக உள்வாங்கப்படவில்லைஎன்றுஅரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. இந்நிலையிலேயே நாளை வேலை நிறுத்தத்தை தொடங்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுமந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார் சுமந்திரன்.

'பெரும்குற்றங்களுக்காகஅரசதலைவர்கள் தண்டிக்கப்படவேண்டும். எவரும் சட்டத்திற்கு மேலானவர்கள்இல்லை. ஆனால், நீதிமன்றில் முன்வைத்த குற்றத்துக்காக முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு வெள்ளிக்கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்ததென்பது, முறையான ஆலோசனை அற்றதாகவே தோன்றுகிறது'என்று தெரிவித்துள்ளார்.

## ரணில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை சிறைச்சாலை வைத்தியசாலையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் தாவது:

ரணில் விக்கிரமசிங்க இயல்பாகவே எம்முடன் கலந்துரையாடினார். அவர் இவற்றைபெரிதாகக்கருத்திற்கொள்ளவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அரசியலில் ஈடுபடுவதாயின் இது ஒரு மரபாகும். அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் அவருக்கும் உரித்தாகும்.

எவ்வாறிருப்பினும்அவருக்குஇவ்வாறான நிலைமை ஏற்பட்டிருப்பது கவலைக்குரியது. சிறிய விடயங்களுக்காக அரச தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுசிறையிலடைக்கப்படுவது தவறு என்பதே எனது நிலைப்பாடாகும். முன்னாள்நிறைவேற்றதிகார அரசுத்தலைவர் யொருவருக்கு இவ்வாறு இடம்பெறுவது சிறந்த விடயமல்ல.

இதற்குமக்களேபதிலளிக்கவேண்டும். இது அரசியல் பழிவாங்கல் அன்றி வேறொன்றும் இல்லை. நாம் மக்களை நேரிப்பதால் தான் அவர் இன்றும் எம்மை நேசிக்கின்றனர் என்றார்.

## எப்போதும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று அவசர செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் அங்கு தொலைபேசி குரல் பதிவொன்றை செய்தியாளர்களிடம் ஒலிபரப்பினார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில், தான் கைது செய்யப்படுவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தைக் கூற விரும்பிருந்தார் எனவும், எனவே தான் கூறுவதைக் குரல் பதிவு செய்து மக்களுக்கு தெரியப்படுத்துமாறு தன்னிடம் அவர் கேட்டிருந்தார்என்றும்அகிலவிராஜ்காரியவசம் இதன் போது தெரிவித்தார்.

அந்த குரல் பதிவில், 'நான் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காகவே செயற்பட்டேன். தனிப்பட்ட இலாபங்களுக்காக எந்த சந்தர்ப்பத்திலும் செயற்பட்டதில்லை. இந்த ஆளும்தரப்பின் உண்மையான முகம் இப்போதுதான் வெளிப்படுவதாகத் தோன்றுகிறது. அனைத்து துறைகளிலும் இடம்பெறும்இந்தஅரசியல்பழிவாங்கல்களை நான் ஏற்றுக் கொள்ளவில்லை' என ரணில் அந்தக் குரல் பதிவில் தெரிவித்திருந்தார்.

## அரசுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் விசாரணைகளின் போது மின்தடை ஏற்பட்டது. மின் தடை ஏற்பட்டதா அல்லது ஏற்படுத்தப்பட்டதா என்பது தெரியாது. சந்தேகநபரொருவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கும் நிலைமை ஏற்பட்டால் நீதிமன்றத்தில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டு, மெழுவர்த்தி ஏற்றப்பட்டு மரண தண்டனை தீர்ப்பு எழுத்தப்பட்ட பேனை உடைக்கப்படுவது சம்பிரதாயமாகும்.

இந்நிலையில் இந்த விசாரணைகளின் போது மின் தடை ஏற்பட்டமையானது எம் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. சுமார் ஓரிரு மணித்தியாலங்களின் பின்னர் மின்தடை நிவர்த்தி செய்யப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் தெளிவாக இருக்க வேண்டும். இவை தொடர்பில் நாட்டின் ஒட்டுமொத்தசட்டத்தரணிகளும்உன்னிப்பான அவதானத்துடனிருக்கின்றனர்.

அந்தவகையில்இலங்கைசட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அரசுத் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தனது டுவிட்டர் தளத்தில் செய்துள்ள பதிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முன்னாள் பொது நிர்வாக அமைச்சர் என்ற ரீதியில், முன்னாள்அரசுத்தலைவரின்இந்தப்பயணம் பொது நிர்வாகம் சார்ந்ததாகும். அதாவது வரவு - செலவு திட்டத்தில் அரசுத் தலைவர்க்கான நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டமையாகும்.

ஒதுக்கபடாத நிதிக்கு அப்பால் பொது நிதி பயன்படுத்தப்படவில்லை என்பது முதலாவது காரணியாகும். அந்த நிதிப் பயன்பாடு தொடர்பில் சட்டமா அதிபரால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாயக் கொண்டு அவதானிக்கும் போது இவ்வாறானதொரு விடயம் அதில் குறிப்பிடப்படவில்லை என்பது இரண்டாவது காரணியாகும்.

இவ்வாறான செயற்பாடுகளின் போது எந்தவொரு அரசுத் தலைவர்யினதும் பதவி காலத்தில் அவர்களால் 'தனிப்பட்ட' என்ற சொற்பதத்தை பயன்படுத்த முடியாது என்பது சட்டத்தின்அடிப்படையிலும்அரசியலமைப்பின் அடிப்படையில் நான் அறிந்த விடயமாகும். உள்நாட்டிலிருந்தாலும் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலும் அரசுத் தலைவர்களுக்கு 'தனிப்பட்ட'என்ற சொற்பதத்தை உபயோகிக்க முடியாது என்றார்.

## சகல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, சிரேஷ்ட உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய ஒருங்கிணைப்பாளர் சாகல ரத்நாயக்க, நவீன் திஸாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஐ.தே.க. பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள,

ரணில் விக்கிரமசிங்கவின் வரலாற்றை எவருக்கும் புதிதாக தெளிவுபடுத்த வேண்டியதில்லை. 2022 நெருக்கடியில் நாட்டைப் பொறுப்பேற்று அவர் அந்த சவாலில் வெற்றி கொண்டமை அதற்கு சிறந்த உதாரணமாகும். கடந்த ஆண்டு இரு தேர்தல்களை நடத்தக் கூடிய சூழலை ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியதன் காரணமாகவே இன்று தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலிருக்கிறது. முன்னாள் அரசுத் தலைவர்யொருவரைக் கண்டு ஆளும்தரப்பு ஏன் இவ்வாறு அச்சப்படுகிறது?

ஊழல் காரணிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளாரெனக் கூறுவதை ஏற்றுக் கொண்டாலும், இலங்கையில்இதற்குமுன்னர் இந்த ஊழல் மாத்திரம்தான் பதிவாகியுள்ளதா? இது மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும். அரச சொத்துக்கள், நிதி என்பன முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக இதற்கு முன்னர் பல வழக்குகள் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் நாட்டில் ஆட்சியமைத்திருக்கின்றனர்.

ஆனால் அவர்களை விடுத்து நாட்டைக் கட்டியெழுப்பியவர்கள்தண்டிக்கப்படுவதுதான் சட்டத்தின் ஆட்சியா? ஜீ.77 மாநாட்டில் கலந்து கொண்ட போது கிடைக்கப் பெற்ற அழைப்பிற்கமையவே முன்னாள் அரசுத் தலைவர் லண்டன் சென்றிருந்தார். அது எவ்வாறுதனிப்பட்ட விஜயமாகக் கருதப்படும்? அவ்வாறெனில் தற்போதைய அரசுத் தலைவர் தனது குடும்பத்தினரைப் பார்க்கச் செல்லும்போது தனக்கான வாகனங்களில் அன்றி பொது போக்குவரத்திலா செல்கின்றார்?

2023 வரவு - செலவு திட்டத்தில் அரசுத் தலைவருக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியே இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறில்லை எனில் ஜே.வி.பி. அன்றே இது குறித்து கேள்வியெழுப்பியிருக்க முடியுமல்லவா? எமக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டு அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஓய்வு பெற்றுள்ள முன்னாள் அரசுத் தலைவர்யைக் கண்டு அச்சப்பட வேண்டாம் என ஆளும்தரப்பிடம் கூறுகின்றோம் என்றார்.

ஐ.தே.க. சிரேஷ்ட உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிக்கும்போது, நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு நாம் மதிப்பளிக்கின்றோம். ஆனால் அண்மைக் காலமாக நீதித்துறை சார் தீர்மானங்கள், நடவடிக்கைகள் முன்கூட்டியே சமூக வலைத்தளங்களில் வெளியாவது எமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. முன்னாள் அரச தலைவர்கள் திட்டமிட்டு அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனரா? நாட்டில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சகல துறைகளிலும் சுயாதீன ஆணைக்குழுக்களை அறிமுகப்படுத்தியதோடு, ஊழல் ஒழிப்பு சட்டத்தையும் ரணில் விக்கிரமசிங்கவே முன்வைத்தார்.

அரசுத் தலைவர்களுக்கு அளவுகடந்த சிறப்புரிமைகள் காணப்பட்ட போதிலும், அவர் அவற்றை எந்த சந்தர்ப்பத்திலும் முறைகேடாகப் பயன்படுத்தவில்லை. எனவே எவ்வித அரசியல் கட்சி பேதங்களும் இன்றி நாம் ஒன்றிணைய வேண்டும். ஆளுந்தரப்பல்லாத அரசியல் குழுக்களை ஒடுக்குவதற்குஆளும்தரப்புமுயற்சித்தால்நாம் அதற்கெதிராக ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் சில அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் எமக்கு அதிருப்திகாணப்பட்டது. அதன்காரணமாகவே நாம் செயற்பாட்டு அரசியலிலிருந்து விலகியிருந்தோம்.

ஆனால் அவரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தும் இவ்வாறான சந்தர்ப்பத்தில்எம்மால்ஒதுங்கியிருக்கமுடியாது. நாட்டைக் கட்டியெழுப்பிய ஒரு தலைவருக்கு இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் கூடாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது. எனவே சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும், அரசியல்பழிவாங்கல்களைதடுப்பதற்குமான போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றார்.

பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவிக்கையில்,

2022 நெருக்கடியின் போது பிரதமராக பதவியேற்ற போது தனது இல்லம் தீக்கிரையாக்கப்பட்ட போது கூட அச்சமின்றி சவாலைஏற்றுஇரண்டுஆண்டுகளில்நாட்டைக் கட்டியெழுப்பினார். அவரால் தொடங்கப்பட்ட

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# தாயகத்தில் தமிழர் மீள்குடியேற்றம் அவசரமாகச் செய்யப்படவேண்டும்

## பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவிப்பு

தமிழர் தாயகத்தில் அவசர கால அடிப்படையில் மீள்குடியேற்றமும் மீள் நிர்மாணமும் செய்வதற்கான திட்ட முன்மொழிவைச் செய்துள்ள பிரித்தானிய தமிழர் பேரவை ஏனைய தரப்புக்களை இணைந்து செயற்படுவதற்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்த பிரித்தானிய தமிழர் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பிரித்தானிய தமிழர் பேரவையானது ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவல நிலைக்கு தீர்வு காணும் வகையில், உடனடி மீள்குடியேற்றம் மற்றும் மீள்நிர்மாணப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று இந்தியாவுடனும், மனிதாபிமான பணிகளுக்கு ஆதரவு தரும் மேற்குலக நாடுகளுடனும் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது.

1983ஆம் ஆண்டு முதல் போர் காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற தமிழ் மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தவும், போரால் சிதைக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் தொடர் நடவடிக்கைகளை எடுக்கப்படுகிறது.

கடந்த காலங்களில், இலங்கையின் அனைத்து ஆளும்தரப்புகளும்தமிழ்மக்களின்மீள்குடியேற்றத்தை புறக்கணித்ததுடன், அதற்கு பல்வேறு தடைகளையும் ஏற்படுத்தி வந்திருந்தன.

போருக்குப் பிந்தைய மிக முக்கியமான பணிகளான மீள்குடியேற்றமும் மீள் நிர்மாணமும் அவசரகாலஅடிப்படையில்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

ஓர் அரசியல் தீர்வு வரும் வரை காத்திருப்பது, மக்களின்நீண்டகாலப்பிரச்சினையைத்தள்ளிப்போடும் பொறுப்பற்ற செயலாகும்.

தற்போதைய ஆளும்தரப்பின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் பொறுப்பேற்பதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த மனிதாபிமானப் பணிகளை அவசரமாகச் செயற்படுத்துவதற்கு, தமிழ் மக்களின் இருப்பு குறித்து உண்மையான அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற நாம் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் குடிசார் அமைப்புகள், மீள்குடியேற்றம் மற்றும் மீள் நிர்மாணம் தொடர்பாக இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் என்றுள்ளது.

# ரணில் கைதை முன்கூட்டிச் சொன்ன யூரியூப்பர் மீது சிஐடியில் முறையீடு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்று சுதத்த திலகசிறி தனது யூடியூப் தளத்தில் வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சி குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்று பிரபல யூடியூபர் சுதத் திலகசிறி தனது யூடியூப் தளத்தில் காணொளி ஒன்றின் ஊடாக தெரிவித்திருந்தார்.

அத்துடன் அவ்வாறு நடக்கவில்லை எனில் தனது யூடியூப் தளத்தின் செயற்பாடுகளை நிறுத்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த விடயம் பாரிய சர்ச்சைத் தோற்றுவித்துள்ளது.

இந்த பின்னணியில் அரசுத்தலைவர் வாக்குமூலம் அளிப்பதற்கு முன்னர் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார் சுதத் திலகசிறி தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சியின் சட்டத்தரணிகள் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்.

# அர்ஜுன மகேந்திரனுக்கு நீதிமன்று அழைப்பாணை

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றில் முற்பட வேண்டும் என்று கொழும்பு நீதிவான் மன்றம்அழைப்பாணைவிடுத்துள்ளது.

செப்டம்பர் மாதம் 26 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி சம்பவத்தில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.




# வழக்கு நடக்கும் விதத்தைப் பார்த்து எதுவேண்டுமானாலும் சொல்லலாம்

## ரணில் கைது தகவல் முன்கூட்டி வந்தது குறித்து அமைச்சர் கருத்து

சில வழக்குகள் நடந்து கொண்டிருக்கும் விதத்தைப் பார்த்து யார் வேண்டுமானாலும் ஒரு கணிப்பைச் சொல்லலாம் என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கே வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்படுவார் என்று சுதத்த திலகசிறி என்பவர் தனது யூடியூப் பக்கத்தில் தெரிவித்தது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

‘இந்த விசாரணைகளில் ஆளும்தரப்பு தலையிடவில்லை. இந்தச் சம்பவத்தில் மட்டுமல்ல, அனைத்து நிதி மோசடிகள் மற்றும் குற்றவியல் ஊழல்களும் சுதந்திரமாக விசாரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களுக்குப் பொருத்தமான வசதிகளைவழங்குவதே ஆளும்தரப்பின் பொறுப்பு.

நாட்டின் எந்த மட்டத்தில் உள்ள ஒருவருக்கும் சட்டம் சமமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காட்டும் ஒரு நிகழ்வாக இதை பார்க்கலாம்.

முன்னதாக, நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி மறைந்த பத்திரிகையாளர் விக்டர்ஐவனும்இப்படி முன்கூட்டியே தெரிவித்திருக்கிறார். சில வழக்குகள் நடந்து வரும் விதத்தைப் பார்த்து யார் வேண்டுமானாலும் ஒரு கணிப்பு செய்யலாம்.

அதுபோன்றேரணில்விடயத்திலும் நீதிமன்றம் பிணை வழங்கும் என்று சிலர் நினைத்திருக்கலாம். பிணை வழங்கப்படாது என்று சிலர் நினைத்திருக்கலாம். அவை வெறும் கோட்பாடுகள் போன்றவை. அவற்றில் சில சரி. அவற்றில் சில தவறு ’என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனிப்பு மீது கட்டுப்பாடு தேவை

இலங்கையில் தற்போது பேசப்படவேண்டிய மிகப் பெரிய மறைந்திருக்கும் நெருக்கடி ஒன்றாகியிருப்பது இனிப்பு உட்கொள்வதன் விளைவாகக் கடுமையாக அதிகரித்து வரும் நீரிழிவு நோய் மற்றும் பிற தொற்றாத நோய்கள் (NCDs) ஆகும். பொருளாதார நெருக்கடி, அரசியல் சீர்கேடு போன்ற காரணிகள் பெரிதும் பேசப்படும் நிலையில், மக்களின் உயிரைக் கவ்வும் இந்நெருக்கடி தேசிய அளவில் போதுமான முக்கியத்துவத்துடன் விவாதிக்கப்படாதிருப்பதே கவலைக்குரியது.

உலகளவில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த 40 ஆண்டுகளில் நான்கு மடங்கு உயர்ந்துள்ளது. சர்வதேச நீரிழிவு கூட்டமைப்பு (IDF) கணக்கீட்டுப்படி, 2030க்குள் 643 மில்லியனும், 2045க்குள் 783 மில்லியன் பேரும் இந்த நோயால் பாதிக்கப்படுவார்கள். இது ஒரு எளிய உடல் நலப் பிரச்சினை மட்டுமல்ல; இதன் விளைவாக இதய நோய்கள், சிறுநீரக கோளாறுகள், பக்கவாதம், கண் பார்வை இழப்பு போன்ற கடுமையான சிக்கல்கள் உருவாகின்றன.

பான் அமெரிக்க சுகாதார அமைப்பு (PAHO) குறிப்பிட்டபடி, 1990 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் பெரியவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவல் 7% லிருந்து 14% வரை இருமடங்காக உயர்ந்துள்ளது. இலங்கையிலும் இந்தப் போக்கு மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

இலங்கை மருத்துவ சங்கம் (SLMA) நேற்று வெளிப்படுத்திய தகவலின்படி, மேற்கு மாகாணத்தில் ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது. நாடு முழுவதும் ஏற்படும் இறப்புகளில் 80% இற்கும் மேல் தொற்றாத நோய்களாலேயே ஏற்படுகின்றன. மேலும், சராசரியாக ஒவ்வொரு இலங்கையனும் ஆண்டுக்கு 25 முதல் 30 கிலோ இனிப்பு உட்கொள்கின்றனர். குழந்தைகள் மட்டும் தினமும் 20 தேக்கரண்டி அளவுக்கு இனிப்பு உட்கொள்வதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

மருத்துவ அமைச்சின் ஊட்டச்சத்து பிரிவின் மூத்த வைத்தியர்கள், சமீபத்தில் பாடசாலை மாணவர்களின் உணவுப் பழக்கங்களில் ஏற்பட்டுள்ள ஆபத்தான மாற்றங்கள் குறித்து எச்சரிக்கை விடுத்தனர். 2024 ஆம் ஆண்டின் தேசிய ஊட்டச்சத்து மாதத்தில் சேகரிக்கப்பட்ட தகவலின்படி, பாடசாலை மாணவர்களின் உடல் நிறை ஒரு பிரச்சினையாக இருக்கின்றது.

மேலும், மாணவர்கள் மத்தியில் 41% பேர் அதிக இனிப்பு கொண்ட உணவுகளை, 17% பேர் இனிப்பு பானங்களை, 28% பேர் அதிக உப்பு கொண்ட உணவுகளை, மேலும் 29% பேர் அதிக கொழுப்பு கொண்ட உணவுகளை தொடர்ந்து உட்கொள்கிறார்கள். இதன் விளைவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 100 குழந்தைகள் முதலாம் வகை நீரிழிவு நோக்குச் சிகிச்சை பெறுகின்றனர்.

இது மிகப் பெரிய எச்சரிக்கை மணி. குழந்தைகளின் கல்வியுடன் சேர்த்து அவர்களின் உடல்நலனும் நன்னடத்தைப் பழக்கங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான வலுவான ஆதாரமிது.

நீரிழிவு நோயின் அதிகரிப்புக்கு முக்கிய காரணிகள்:

அளவுக்கு மீறிய இனிப்பு பயன்பாடு, செயலாக்கப்பட்ட (processed) உணவுப் பழக்கம், உடற்பயிற்சியின் குறைவு, நகர்ப்புற வாழ்க்கை முறை, குழந்தைகளின் தவறான உணவுப் பழக்கம் என்பனவாகும். இந்நிலையை மாற்ற தேசிய அளவிலான ஒருங்கிணைந்த திட்டம் அவசியமாகிறது.

இனிப்பு வரி – இனிப்பு கலந்த பானங்கள், இனிப்பு உணவுகள் மீது சிறப்பு வரி விதிக்கவேண்டும். உலக நாடுகள் பல இதனை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளன.

குழந்தைகள்கல்வியில்ஊட்டச்சத்துபாடங்கள் கல்விசீர்திருத்தங்களில் மாணவர்களின் உடல்நலக் கல்வி முக்கிய பங்காக அமையவேண்டும்.

பாடசாலை வளாகங்களில் அதிக இனிப்பு கொண்ட பானங்கள், நொருக்குத் தீனிகளின் விற்பனைக்கு தடைவிதிக்க வேண்டும்.

வருடாந்திர அடிப்படையில் பள்ளி மாணவர்களுக்குச் சுகாதார பரிசோதனைகள் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

ஊடகங்கள் வழியாக அதிக இனிப்பு உட்கொள்வதன் தீமைகள் குறித்து தேசிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்று இலங்கையில் பொருளாதார நெருக்கடி குறித்து அதிகம் பேசப்படுகின்றது. ஆனால், இனிப்பு நெருக்கடி அதன் தாக்கத்தைவிட மிக மோசமானதாக மாறக்கூடியது. காரணம், இது மக்கள் உடல்நலத்தையே அடிப்படையாகக் கெடுக்கிறது. நாளைய தலைமுறையை உருவாக்க வேண்டிய மாணவர்களே இன்று நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களின் அடிமைகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆளும்தரப்பு கல்வி சீர்திருத்தங்களைப் பற்றி பேசும் இந்நேரத்தில், சுகாதார மற்றும் ஊட்டச்சத்து கொள்கைகளும் கல்வியுடன் இணைக்கப்படுவது காலத்தின் தேவை. இல்லையெனில், பொருளாதார முன்னேற்றம் எவ்வளவு எட்டியிருந்தாலும், நாடு முழுவதும் உடல்நலமற்ற மக்கள் தொகை உருவாகும் அபாயம் உள்ளது.

இலங்கை ஆளும்தரப்பு உடனடியாக இனிப்பு கட்டுப்பாட்டு சட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள், மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை வலுவாக நடைமுறைப்படுத்த வேண்டும். இனிப்பான உணவின் இனிமை, நாளைய நாட்டின் துயரமாக மாற விடக்கூடாது.

# தமிழ்ச்சமூகம் இழந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர் விமலராஜா

**வீரகத்தி தனபாலசிங்கம்**



இலங்கையில் குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர்களில் ஒருவரான வேலாயுதம் விமலராஜா மறைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதியான அவர் கடந்த ஜூன் மாதம் 12 திகதி தனது 90 வது வயதை அடையவிருந்த நிலையில் சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் ( 12 மே 2025 ) அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

எனது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியை சேர்ந்தவரான விமலராஜாவுடன்இளவயதில்பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அவர் என்னைவிடவும் வயதில் மிகவும் மூத்தவர். நாங்கள் வளர் இளம் பருவத்தினராக இருந்த நாட்களில் விமலராஜா கரவை வெல்லன் விநாயகர் கோவில் திருவிழாக்களுக்கு வந்ததை நான் கண்டிருக்கிறேன்.

கொழும்பில்தான் அவருடன் ஊடாடக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் ஒரு பத்திரிகையாளனாக இருப்பது அவருடன் நெருக்கமாக பழகுவதற்கான வாய்ப்பை அதிகரித்தது.. விமலராஜாவின் தந்தையார் கே. வேலாயுதம் அவர்கள் எமது ஊரில் பிரபல்யமான ஒரு ஆங்கில ஆசிரியர்.

அவுஸ்திரேலியாவுக்கு விமலராஜா குடும்பத்துடன் புலம்பெயரும் வரை நாமிருவரும் நெருக்கமான தொடர்பைப் பேணினோம். அவரின் குடும்பத்தவர்களும் கூட எனக்கு பழக்கமானவர்களே. கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக என்னுடன் அவர் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நீண்ட நேரம் பலதும் பத்தும் பேசுவார். பழைய அனுபவங்களையும் மீட்பார். அவரது மனைவி இரு வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் காலமானபோது விமலராஜாவுடன் தொடர்புகொண்டு அனுதாபத்தை தெரிவித்து ஆறுதல் கூற முடியாத அளவுக்கு அவர் சுகவீனமுற்றிருந்தார் என்பது துரதிர்ஷ்டவசமானது.

கரவெட்டி கிராமத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டவரான விமலராஜா விக்னேஸ்வரா கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர். அந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளையின் தலைவராக பல வருடங்கள் பணியாற்றிய அவர் நான் அந்த கல்லூரியில் கல்வி கற்காதவன் என்ற போதிலும், பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் பங்கேற்குமாறு அழைப்பார். ' நீ அங்கு கல்வி கற்காவிட்டாலும், எந்தவொரு கரவெட்டியானும் விக்னேஸ்வராவுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் இருக்க முடியாது' என்று நகைச்சுவையாக அவர் கூறுவார். அவர் யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலும் கல்வி கற்றவர்.

நாமெல்லோரும் என்றென்றைக்கும் பெருமைப்படக்கூடியதாக தொழில் சட்டத்துறையில் சிறந்து விளங்கிய விமலராஜா கைத்தொழில் மற்றும் தொழில் சட்டவாதிகள் மத்தியில் மிகுந்த அறிவார்ந்தவர்களில் ஒருவராக விளங்கினார். தொழில் சட்டங்களில் ஆழமான ஆய்வுகளைச் செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் கொழும்பில் தொழில் திணைக்களத்தில் இருபது வருடங்களாக பணியாற்றியபோது நாட்டின் பல பாகங்களிலும் நீதிமன்றங்களில் கைத்தொழில் உறவுகளுடன் கூடிய முக்கியமான வழக்குகள் பலவற்றைக் கையாண்டார். தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் அதிகாரி என்ற வகையில் தொழில் முகாமைத்துவ மகாநாடுகள் பலவற்றுக்கு விமலராஜா தலைமை தாங்கியதுடன் நீண்டகாலமாக இழுபறிப்பட்ட தொழில் பிணக்குகள் பலவற்றுக்கு தீர்வையும் கண்டார். அதற்காக தொழில் திணைக்களத்தில் அவருக்கு தனித்துவமான ஒரு மதிப்பு இருந்தது.

சட்டக்கல்லூரியில் படித்து சட்டத்தரணியாக வெளியேறியதும் 1978 ஆம் ஆண்டில் தொழில் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்ற விமலராஜா கொழும்பிலும் நீர்கொழும்பிலும் பணியாற்றினார். வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் பிரபலமான சட்டத்தரணிகள் முன்னிலையான சிக்கலான வழக்குகள் பலவற்றை திறமையாக கையாண்ட விமலராஜாவின் பல தீர்ப்புக்களை மேல்நிலை நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தின.

1991 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அவர் அதற்கு பிறகு தொழில் பிணக்குகள் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் முதல்நிலை நீதிமன்றங்களிலும் மேல்நிலை நீதிமன்றங்களிலும் சட்டத்தரணியாக முன்னிலையானார். கைத்தொழில் நீதிமன்ற நடுவர்கள் சங்கத்தின் தலைவராக ஆறு வருடங்கள் பதவி வகித்த விமலராஜா 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில் சட்ட நிறுவனத்தின் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றினார். தொழில் சட்டங்கள் பற்றி அவர் எழுதிய பல்வேறு நூல்கள் அந்த துறை சார்ந்தவர்களுக்கு பெரிதும் பயனுடையவையாக இருக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பிறகு அவர் இலங்கைக்கு வரமுடியாமல் போய்விட்டது. அவரின் மறைவு என்னைப் பொறுத்தவரை, என்னைப் புரிந்து கொண்டு நெருக்கமாகப் பழகியதுடன் பல்வேறு வழிகளிலும் உதவியாக இருந்த ஒரு நல்லுள்ளத்தின் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## மாகாண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டங்களையே இன்று இந்த ஆளும்தரப்பும் முன்னெடுத்துச் செல்கிறது. அவ்வாறான ஒருவருக்கு இவ்வாறானதொரு துரதிஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளமை உண்மையில் கவலைக்குரியது. அரச நிறுவனங்களும், திணைக்களங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது.

அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அது மிகவும் அச்சுறுத்தல் மிக்க சூழலாகும். இவ்வாறானதொரு முறைமை மாற்றத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே ஏனைய கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் நாட்டின் ஜனநாயகத்துக்கு அது பாரிய அச்சுறுத்தலாக அமையும். நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் இந்த சவாலை வெற்றி கொள்வார். கட்சி என்ற ரீதியில் நாம் அனைவரும் அவருடன் இருப்போம் என்றார்.

நவீன் திஸாநாயக்க தெரிவிக்கையில், முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளமையானது இலங்கையில் ஜனநாயகத்தில் ஏற்பட்டுள்ள பெரும் கரும்புள்ளியாகும். இது அரசியல் பழிவாங்கல் என்பது தெளிவாகத் தெரிகிறது. எவ்வாறிருப்பினும் எமது தலைவரைப் பாதுகாத்துக் கொண்டு நாம் சவால்களை வெற்றிகொள்வோம். இது தற்போது அனைத்து கட்சிகளும் ஒன்றிணைவதற்கு உருவாகியுள்ள சிறந்த சந்தர்ப்பமாகும். இந்த தன்னிச்சையான சர்வாதிகார ஆட்சியை நிறைவுக்கு கொண்டு வர சகலரும் ஒன்றிணைய வேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவரின் லண்டன் விஜயம் உத்தியோகபூர்வ விஜயமாகவே கருதப்படுகிறது. அதற்கான ஆவணங்கள் எம்மிடம் உள்ளன. அவை நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் இந்த சிறுபிள்ளைத்தனமான அரசியல் முடிவுக்குவர வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் எமது தலைவரை மேலும் பலப்படுத்தும். இந்த சதியை எவ்வாறேனும் தோற்கடிப்போம். அச்சமின்றி அனைவரும் எம்முடன் இணையுங்கள் என அழைப்பு விடுகின்றோம் என்றார்.

## தொடருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடருந்து நிலையத்திலிருந்து காலை 05.15 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்பட திட்டமிடப்பட்ட தொடருந்து , மருதானை தொடருந்து நிலையத்திலிருந்து நண்பகல் 12.10 மணிக்கு காலிக்கு புறப்பட திட்டமிடப்பட்ட தொடருந்து ஆகியன இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை காலி தொடருந்து நிலையத்திலிருந்து அதிகாலை 05 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்பட திட்டமிடப்பட்ட தொடருந்து (எண் 8327). சமுத்திரதேவி காலி தொடருந்து நிலையத்திலிருந்து சுமார் 1 மணி நேரம் தாமதமாக காலை 06.30 மணிக்கு பயணத்தைத் தொடங்கவுள்ளது.

காலி தொடருந்து நிலையத்திலிருந்து அதிகாலை 04.10 மணிக்கு கொழும்பு கோட்டை நோக்கி புறப்படும் தொடருந்து (எண் 8320), காலை 08.50 மணிக்கு காலி தொடருந்து நிலையத்திலிருந்து பயணத்தைத் தொடங்கவுள்ளது.

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் பொலிஸ் தினத்தை முன்னிட்டு தொடங்கப்படவுள்ளது.

குற்றச்செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.

விசேட நடவடிக்கைகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் 4.5 பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அவற்றில் கட்டடங்கள், வீடுகள், வாகனங்கள், காணிகள், நகைகள், படகுகள் மற்றும் 57 மில்லியன் ரூபா ரொக்கப் பணம் ஆகியவை அடங்கியுள்ளன. அதன்படி, பணமோசடிச் சட்டத்தின் கீழ் இந்த சொத்துக்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்றார்

# ‘செவ்வழிநயனம்’ சைத் தமிழ் விருது இவ்வருடம் காலைகதிர் பதிரிகைக்கு



நல்லை சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நடத்தப்படும் கலைக்கூடல் 2025 விழா நேற்று நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன மண்படத்தில் இடம்பெற்றது.

கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களுக்கு நிகழ்வில் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் செவ்வழி நயனம் விருதும் வழங்கப்பட்டது.

இந்த வருடத்திற்கான விருது சைவ சமயத்திற்கு ஆற்றிய பணிகளுக்காக காலைக்கதிர் பத்திரிகைக்கு வழங்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு செவ்வழிநயனம் பக்கத்தை வெளியிட்டு வைத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிவரும் தொண்டிற்காக இந்தச் சிறப்பு விருது வழங்கப்படுவதாக விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பொழிவும் பொலிவும் என்ற பனுவலை கலாநிதி கமலநாதன் வெளியிட்டு வைத்தார். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

**076 3983858**

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2025இல் வெளியிடப்பெற்றது